சுதேச மருத்துவத்துறை அமைசசு

# ஹோமியோபதி மருத்துவ சபை

# ஆண்டறிக்கை

# 2014

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | பொழிப்பு | 2 |
| 2 | அறிமுகம் | 3 |
| 3 | ஹோமியோபதி மருத்துவ சபை | 4 |
| 4 | பின்னணி | 5 |
| 5 | மருத்துவப் பேரவையின் நோக்கங்கள் | 8 |
| 6 | மருத்துவப் பேரவையின் அதிகாரங்கள் | 9 |
| 7 | மருத்துவப் பேரவையின் உறுப்பாண்மையும் பதவிக் காலமும் | 11 |
| 8 | கூட்டிணைந்த விபரங்கள் | 12 |
| 9 | மருத்துவப் பேரவையின் செயற்பாட்டுத் திட்டம் | 13 |
| 10 | ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் செயலாற்றுகை | 16 |
| 11 | கணக்காய்வு அறிக்கை | 25 |
| 12 | ஆசிகள் | 26 |

# 01. பொழிப்பு

2014 ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதுடன், ஹோமியோபதி மருத்துவப் பேரவை 2014 ஆம் ஆண்டு பின்பற்றிய மொத்தச் செயற்பாடுகளையும் அவை பற்றிய மதிப்பீடுகளையும் முன் வைப்பது இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

வருடாந்தம் நிறைவேற்றுகின்ற செயற்பாடுகளை ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற ஹோமியோபதி மருத்துவ பேரவையின் நோக்கம், திட்டங்கள், திறமுறைகள் மற்றும் ஆண்டுக்குள் பின்பற்ற வேண்டிய திரட்டிய செயற்பாடுகள் பற்றி அதிமேதகைய சனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், கௌரவ அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உட்பட மொத்த அரசியல் நிறைவேற்றுநர்கள், சட்டவாக்குநர்களின் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு 2014 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை வெளியிடுவதற்கான பிரதான காரணம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

2014 ஆம் ஆண்டிலும் ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் பணிகள் நெறிப்படுத்தப்பட்டது இடைக்காலக் குழுவின் ஊடாகவேயாகும். முன்னைய ஆண்டைப் போன்றே இந்த ஆண்டும் மூன்று ஹோமியோபதி மருத்துவர்களைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவின் ஆலோசனையும் ஒத்துழைப்பும் இந்தப் பேரவைக்குக் கிடைத்தது.

புதிய ஹோமியோபதி சட்டத்தை நிறைவேற்றி ஹோமியோபதி மருத்துவப் பேரவை நியமிக்கப்படும் வரைக்கும் மருத்துவப் பேரவையின் ஊடாக வழங்கப்படுகின்ற சேவைகளை நிலையான மட்டத்துக்குக் கொண்டு வருவதற்காக நிறுவனத்தின் நிலையான தன்மையை கட்டியெழுப்புவதற்குத் தேவையானவை எனக் கருதப்பட்ட ஹோமியோபதி இடைக்காலக் குழு வெற்றிடங்கள் பதவிகளுக்காக பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்தல், புதிய கிளினிக்குகளை ஆரம்பிப்பதற்காக கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல், நடத்துகின்ற கிளினிக்குகளை அரசாங்கத்தின் நிரந்தரக் கட்டடங்களில் நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைவாக ஹோமியோபதி சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாக கௌரவ அமைச்சரின் அறிவுறுத்தல் மற்றும் பணிப்பின் பிரகாரம் சட்டத்தின் 27 (1) C பிரிவின் கீழ் புதிய 27 மருத்துவர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் சட்டத்தின் 27(5) ஆம் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த 19 ஹோமியோபதி தற்காலிக மருத்துவர்களை பொதுப் பட்டியலில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவ முறையை மேம்படுத்துவதற்கு மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல் ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் அடிப்படை நோக்கமாகும். நேரொத்த அமைச்சான சுதேச மருத்துவ அமைச்சின் ஹோமியோபதி மருத்துவப் பேரவை பற்றிய நோக்கமானது ஹோமியோபதி மருத்துவ முறையை மேம்படுத்துவதற்காக திறமுறைகளை அறிமுகப்படுத்துவதாகும். இந்த இரண்டு நிறுவனங்களினதும் குறிக்கோளை எய்து கொள்ளுவதற்கு முக்கிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளுவது இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

# 02. அறிமுகம்

"சமமானவைகளால் சமமானவைகள் அழிந்து போகும்" என்னும் இயற்கைக் கோட்பாட்டின் அடிப்படையிலான மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையைக் குறிப்பிடலாம். 18 வது நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டுப் பிரசையான கிருஷ்டியன் பெட்ரிக் சாமுவேல் ஹானிமான் என்னும் மருத்துவர் இந்த மருத்துவ முறையின் ஆரம்பகர்த்தா என்பதுடன் இந்த மருத்துவ முறையை விரிவுபடுத்துவதற்கும் அளப்பரிய சேவையாற்றிய ஒருவராவார். இன்றைய தினம் ஹோமியோபதி முறையை ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ முறையாக உலகத்தில் அனேக நாடுகளில் இந்த முறையைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக இந்திய அரசாங்கம் ஹோமியோபதி மருத்துவ முறையை தேசிய சுகாதார சேவையுடன் இணைத்து நாடு பூராவும் பரந்த ஹோமியோபதி கிளினிக்குகள் மற்றும் மருத்துவமனைகள் ஊடாக ஹோமியோபதி சிகிச்சைகளை பொதுமக்களுக்கு வழங்குகின்றது.

1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் 1 வது பகுதியின், 2 வது பிரிவின், 1 வது உப பிரிவின் பிரகாரம் இலங்கை ஹோமியோபதி மருத்துவப் பேரவை நிறுவப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களுக்கு இடையே தெரிவு செய்யப்படுகின்ற ஏழு பேரை உள்ளடக்கியதாக இந்த ஹோமியோபதி மருத்துவப் பேரவை அமையும். ( தற்பொழுது ஹோமியோபதி மருத்துவப் பேரவை கலைக்கப்பட்டுள்ளதுடன் இதன் பணிகள் இடைக்காலக் குழுவினால் நிருவகிக்கப்படுகின்றது.) பதிவாளர் ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் செயலாளராவார்.

இந்தப் பேரவையின் ஊடாக நெறிப்படுத்தப்படுகின்ற 7 அரசாங்க ஹோமியோபதி கிளினிக்குகள் ஏழு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. தெஹிவலை, பரகடுவ, மொணறாகல, பாலமுனை, மாத்தளை, குருநாகல் மற்றும் தோலங்கமுவ ஆகியனவே இந்த இடங்களாகும்.

# 03. ஹோமியோபதி மருத்துவ சபை

**நோக்கு**

ஹோமியோபதி மருத்துவ முறையை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்தல்.

**செயற்பணி**

ஹோமியோபதி மருத்துவ முறையின் ஊடாக மனித வளங்களையும் பௌதீக வளங்களையும் மேம்படுத்துவது சம்பந்தமான முறையான கொள்கைகளை வகுத்து இதனை பொதுமக்களுக்கு இடையே பிரபல்யப்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல்.

**குறிக்கோள்**

1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஹோமியோபதி துறையின் தொழில்சார் கல்வி மற்றும் சுகாதாரச் சேவைகளை தரம் வாய்ந்ததாக விரித்தி செய்தல் அத்துடன் அறிவு ஆற்றல் மற்றும் அனுபவம் கொண்ட தொழில்சார்பாளர்களின் மூலம் நோயாளர்களின் நோய் நிவாரணத்தை நிலை நிறுத்தல் மற்றும் ஆரோக்கியமானவர்களின் தொடர்ச்சியான ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக தொழில்சார் சட்ட அதிகாரத்தினை வழங்குவதன் ஊடாக தொழில்சார் கௌரவத்தையும் தரத்தையும் பாதுகாத்தல்.

## 04. பின்னணி

ஹோமியோபதி மருத்துவப் பேரவை பிரதானமாக இது ஒரு தொழில்சார் சபையாகும். ஆரம்ப ஹோமியோபதி மருத்துவப் பேரவை உறுப்பினர்கள் ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம் விடயத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் பின்னர் மருத்துவப் பேரவைக்காக உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களுக்கு இடையே நடத்தப்படுகின்ற வாக்கெடுப்பின் ஊடாக தெரிவு செய்யப்படுவர். விடயத்துக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் சிபாரிசுகள் மற்றும் அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் கடமைகளும் அதிகாரங்களும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். ஹோமியோபதி சட்டத்துக்கு அமைவாக ஒழுங்கு விதிகளை வகுப்பதற்கு ஹோமியோபதி மருத்துவப் பேரவைக்கு அதிகாரம் உண்டு. இந்த ஒழுங்கு விதிகள் ஹோமியோபதி சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக கௌரவ அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.

### சட்டமும் ஒழுங்கு விதிகளும்.

ஹோமியோபதி முறையை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ முறையாக 40 வருட காலம் மற்றும் ஹோமியோபதி மருத்துவப் பேரவை நிறுவப்பட்டு 30 வருட காலத்துக்கும் அதிக காலம் கடந்தும் துரதிஷ்டவசமாக ஹோமியோபதி சட்டம் செயற்படுத்துவதற்கு இற்றை வரை தேவையான ஒழுங்கு விதிகளில் மிகச் சிறிய அளவு மாத்திரமே ஒழுங்கு விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை ஹோமியோபதி மருத்துவ முறையை மேம்படுத்துவதற்கு தடையாக இருப்பதுடன், சட்டத்தையும் மீறி பல மோசடிகள் இடம் பெறுவதற்கும் இடமளிக்கப்படுகின்றது. மேலும் இதனால் மருத்துவப் பேரவைக்கு தமது குறிக்கோளை அடைந்து கொள்ள முடியாதுள்ளதுடன் முறையாக செயல்வலுப்படுத்துவதற்கும் முடியாதுள்ளது.

**இற்றைவரை வெளியிடப்பட்டுள்ள துணைச் சட்டங்கள்**

1. மருத்துவ சபைச் சட்டம் - 1981
2. ஹோமியோபதி ஒழுங்கு விதிகள் - 1980

(மருத்துவச் தொழில் சார்பாளர்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் ஹோமியோபதி மருந்து இறக்குமதி)

3. ஹோமியோபதி பேரவைச் சட்டம் - 1983
4. ஹோமியோபதி மருத்துவ சபை தேர்தல் ஒழுங்குவிதிகள் - 1998

## ஹோமியோபதி மருத்துவப் பேரவையை நிறுவுதல்.

முதலாவது ஹோமியோபதி மருத்துவப் பேரவை 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கௌரவ அமைச்சரினால் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவப் பேரவைக்கு உறுப்பினர்களை நியமித்து ஹோமியோபதி சட்டம் செயல்வலுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குப் பின்னர் மருத்துவப் பேரவைக்கு உறுப்பினர்களை ஹோமியோபதி சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களுக்கு இடையே வாக்கெடுப்பொன்றை நடத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மூன்றாவது ஹோமியோபதி மருத்துவப் பேரவைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக மருத்துவப் பேரவை உறுப்பினர்கள் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டனர்.

## ஹோமியோபதி மருத்துவப் பேரவை உறுப்பினர்கள்

- முதல் ஹோமியோபதி மருத்துவப் பேரவை உறுப்பினர்கள் கௌரவ அமைச்சரினால் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நியமிக்கப்பட்டனர். (1979-1989)

- இதன் பின்னர் சுமார் 10 வருடங்கள் மருத்துவப் பேரவைத் தேர்தல் ஒழுங்கு விதிகளை வகுக்காததால் மருத்துவப் பேரவை செயற்படாதிருந்தது. (1989-1998)

- தேர்தலொன்றை நடத்தி 5 வருட கால எல்லைக்குட்பட்டு 1998 செப்தெம்பர் மாதம் மருத்துவப் பேரவை தெரிவு செய்யப்பட்டது. (1998-2003)

- மீண்டும் சுமார் 03 வருடங்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு மாற்றம் அத்துடன் பலவிதமான சட்டம்சார் விடயங்களினால் மருத்துவப் பேரவை செயற்படாது இருந்தது. (2003 -2006 )

- மூன்றாவது மருத்துவப் பேரவை 2006 ஆம் ஆண்டு வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டதுடன் இது 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை செயற்பட்டது. கௌரவ அமைச்சர் 2009 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் மருத்துவப் பேரவை உறுப்பினர்களை பதவியிலிருந்து நீக்கி விட்டு இந்தப் பதவிகளுக்காக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

- கௌரவ அமைச்சரினால் 2009.10.29 ஆந் திகதியிடப்பட்ட 1625 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக கலைக்கப்பட்ட மருத்துவப் பேரவையின் மீதி இரண்டு வருட காலத்துக்காக மருத்துவப் பேரவையொன்று நியமிக்கப்பட்டது. இந்த மருத்துவப் பேரவையின் காலம் முடிவடைந்ததும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆந் திகதி இந்த மருத்துவப் பேரவை இல்லாதொழிக்கப்பட்டது.

- இதிலிருந்து 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆந் திகதி வரை மருத்துவப் பேரவை இல்லாதிருந்தது.

- அமைச்சரவையின் அங்கீகாரம் மற்றும் கௌரவ சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கௌரவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் மருத்துவப் பேரவைப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆந் திகதி ஹோமியோபதி இடைக்காலக் குழு நியமிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை மருத்துவப் பேரவைக்கு உரிய பணிகளை இந்த இடைக்காலக் குழுவின் ஊடாகவே செயற்படுத்தப்படுகின்றது.

# 05. மருத்துவப் பேரவையின் நோக்கங்கள்

**ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் குறிக்கோள்கள் பின்வருமாறு.**

1. ஹோமியோபதி மருத்துவர்களின் பதிவு மற்றும் பதிவை தற்காலிகமாக நிறுத்துதல்.

2. ஹோமியோபதி மருத்துவ முறை விதிகள் மற்றும் தொழில்சார் ஒழுக்க நெறிகளைப் பேணுதல்.

3. ஹோமியோபதி மருத்துவ முறையை விரிவுபடுத்துதல் மற்றும் ஊக்கப்படுத்துதல் அத்துடன் ஹோமியோபதி மருத்துவக் கல்வியை மேம்படுத்துதல்.

4. ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் நிறுவனங்களைத் தாபித்தல் அத்துடன் சட்டரீதியான அங்கீகாரம்.

5. ஹோமியோபதி மருந்துகள் மற்றும் திரவியங்கள் உற்பத்தி, விற்பனை அத்துடன் ஒழுங்குறுத்தல்.

6. ஹோமியோபதி மருத்துவ முறை மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பிலான அறிவுறுத்தும் புத்தகங்கள், சஞ்சிகைகள் வெளியிடுதல்.

7. ஹோமியோபதி சட்டத்துக்கு அமைவாக சட்டம் மற்றும் ஒழுக்க நெறிகளை வெளியிடுதல்.

8. ஹோமியோபதி சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தொழில்சார் சபையாக ஹோமியோபதி தொழில் சார்பாளர்களினதும் உறுப்பினர்களினதும் பொறுப்புக்கள் பற்றி கௌரவ அமைச்சருக்கு விளக்கமளித்தல்.

## 06. மருத்துவப் பேரவைக்குள்ள அதிகாரங்கள்.

ஹோமியோபதி சட்டத்தின் 23 வது ஒழுங்கு விதியின் பிரகாரம் மருத்துவப் பேரவைக்கு உரிய அதிகாரங்கள் பின்வருமாறு.

1. ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களை பதிவு செய்தல்.

2. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை அனுமதித்து அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல்.

3. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிக்கான பாடநெறி பற்றிய பாட விதானம் மற்றும் திருத்தங்கள் தொடர்பான பாடவிதானத்தை வகுத்தல்.

4. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரியின் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு பரீட்சை நடத்தி பட்டப்படிப்பு அல்லது டிப்ளோமா சான்றிதழ் வழங்தல்.

5. பரீட்சைக் கட்டணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணங்கள் என கட்டணங்களை விதித்தல் மற்றும் அறவிடுதல்.

6. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரியின் நிலை மற்றும் தரத்தின் வளர்ச்சியை ஆராய்தல், அவதானித்தல் மற்றும் கற்கைகளின் தரம் தொடர்பில் உறுதிப்படுத்தல்.

7. மருத்துவப் பேரவையினால் வெளியிடப்படுகின்ற பரீட்சை நடத்துவதற்கான பொதுப் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களையும் வெளிப் பரிசோதகர்களையும் நியமித்தல்.

8. சட்ட ஏற்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கும் சிபாரிசுகள் அத்துடன் தேர்வு முறைக்கு அமைவாக செயற்படாத மருத்துவக் கல்லூரிகளைத் தடை செய்தல் அல்லது அங்கீகரிப்பை இடைநிறுத்தல். (இவ்வாறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் குறித்த நிறுவனத்தின் நிருவாகக் குழுவிற்கு தவறுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான கால அவகாசம் வழங்குதல் வேண்டும்.)

9. ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனங்களைத் தாபித்தல், பட்டப் பின் படிப்பு பாடநெறிகளை ஒழுங்கு செய்தல், ஹோமியோபதி மருந்து உற்பத்திக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

10. ஹோமியோபதி சஞ்சிகைகளை வெளியிடுதல்.

11. சட்டத்தின் எதிர்பார்ப்பும் மருத்துவப் பேரவையின் நோக்கங்களையும் அடைந்து கொள்ளுவதற்கு ஹோமியோபதி நிதியத்தைப் பயன்படுத்தல்.

12. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறையின் மேம்பாட்டுக்கு உரியதான மருத்துவப் பேரவையின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல்.

13. மருத்துவப் பேரவையின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கும் சட்டத்தின் ஏற்பாடுகளை செயல்வலுப்படுத்துவதற்கும் ஒழுங்கு விதிகளை வகுத்து கௌரவ அமைச்சரினால் தேவையான ஒழுங்கு விதிகளை பாராளுமன்றத்தில் அங்கீகரிப்பித்துக் கொண்டு வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரகடனப்படுத்தல்.

## 07. மருத்துவப் பேரவையின் உறுப்பாண்மையும் பதவிக் காலமும்

ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் உறுப்பாண்மை தலைவர் உட்பட ஏழு ஹோமியோபதி மருத்துவர்களைக் கொண்டதாகும். மருத்துவப் பேரவையின் பொதுப் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவ தொழில் சார்பாளர்களின் வாக்கெடுப்பின் மூலம் ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். மருத்துவப் பேரவையின் செயலாளரை / பதிவாளரை நியமிப்பது மருத்துவப் பேரவையினாலாகும். மருத்துவப் பேரவைக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு இடையே மருத்துவப் பேரவையின் தலைவர் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்துக்கு அமைவாக மருத்துவப் பேரவை சட்டபூர்வமாக செயல்வலுப்பெறுவது இதை கௌரவ அமைச்சர் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தியதன் பின்னரேயாகும். மருத்துவப் பேரவைக்காக 5 வருடங்களுக்கு தெரிவு செய்யப்படுவர்.

## 08. கூட்டிணைந்த விபரங்கள்.

**நிறுவனத்தின் பெயர்** :- ஹோமியோபதி மருத்துவப் பேரவை

**முகவரி** :- இலக்கம் 94, செல்டன் ஜயசிங்க
மாவத்தை, வெலிசர,
நாகம.

**தொலைபேசி இலக்கம்** :- 011-2958175

**பெக்ஸ்** :- 011-2958175

**மின்னஞ்சல்** :- homosri.mcouncil@gmail. Com

**கூட்டிணைந்த நிறுவனத்தின் நிலைமை** :- 1970 ஆண்டின் 07 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 22 மற்றும் 23 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அதிகாரங்களும் குறிக்கோளும் கொண்ட ஹோமியோபதி மருத்துவப் பேரவை தாபிக்கப்பட்டுள்ளது.

**நிருவாகக் கட்டமைப்பு** :- செயலாளர் /பதிவாளர்
விடயப் பொறுப்பு மருத்துவர்கள்
முகாமைத்துவ உதவியாளர்
மருந்து கலவையாளர்
அலுவலக உதவியாளர்

**வங்கியாளர்கள்** :- இலங்கை வங்கி – தெப்ரோபேன் கிளை, கொழும்பு.
கொமர்ஷல் வங்கி – ஜாஎல கிளை

# 09. செயற்பாட்டுத் திட்டம் - 2014

# பொழிப்பு

**<u>நோக்கம் 01</u>**

- ஹோமியோபதி மருத்துவ முறைக்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

**<u>திறமுறை</u>**

- சிகிச்சையளிப்பதன் மூலம் பொது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.
- முதியோர் மற்றும் சிறுவர்களுக்கிடையே மருத்துவ முறை பற்றிய நம்பிக்கையை கட்டியெழுப்புதல்..
- அமைச்சினதும் மற்றும் சகல நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களை தெளிவு படுத்துதல்.
- ஊடகங்கள் ஊடாக ஹோமியோபதி மருத்துவ முறை தொடர்பிலான விளம்பரத்தை வழங்குதல்.
- ஹோமியோபதி மருத்துவர்களுக்கு இடையே புரிந்துணர்வை வளர்த்தல்.
- அமைச்சின் பெயரை மாற்றுதல். ( "ஹோமியோபதி " என்னும் பெயரையும் உள்ளடக்கியவாறு)

**நோக்கம் 02**

- ஹோமியோபதி பேரவைக்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டவட்டமான நிருவாக திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

**திறமுறை**

- ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் நிருவாகக் கொள்கை தொடர்பில் ஒழுங்கு விதிகளை வகுத்தல்.

**நோக்கம் 03**

- ஹோமியோபதி பொதுச் சுகாதார சேவையொன்றைத் தாபித்தல்.

**திறமுறை**

- ஆட்சேர்ப்புக் கட்டமைப்பு மாற்றங்களை அங்கீகரிப்பித்துக் கொள்ளல்.
- சம்பளங்கள் மற்றும் பதவியணி.
- ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.

**நோக்கம் 04**

- ஹோமியோபதி மருத்துவ தொழில்சார்பாளர்களை உருவாக்குதல் மற்றும் மருத்துவத் தொழில் வல்லுநர்களை உருவாக்குதல் அத்துடன் அவர்களது அறிவு மற்றும் ஆற்றலை விரித்தி செய்தல்.

**திறமுறை**

- துணைச் சட்டங்களை வகுத்தல், அங்கீகரித்தல் மற்றும் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை நிறுவுதல்.

**<u>நோக்கம் 05</u>**

- ஹோமியோபதி மருந்துகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பில் சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

**<u>திறமுறை</u>**

- துணைச் சட்டங்களை வகுத்தல்.
- ஹோமியோபதி மருந்துக் களஞ்சியங்கள் மற்றும் மருந்து விற்பனை நிலையங்களை நிறுவுவதற்காக நிதியமொன்றைக் கட்டியெழுப்புதல்.

# 10. ஹோமியோபதி மருத்துவ சபையின் செயலாற்றுகை
## 2014 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் திசெம்பர் வரை

**10 -1** கிளினிக் முகாமைத்துவமும் நடாத்திச் செல்லலும்.

- மருத்துவ சபையின் கீழ் 07 மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள 07 அரசாங்க ஹோமியோபதி மருத்துவ கிளினிக்குகள் நடாத்திச் செல்லல்.
- மருத்துவ சபையின் கண்காணிப்பின் கீழ் நடாத்தப்படுகின்ற இந்த கிளினிக்குகளுக்கு சம்பளங்களும் படிகளும் வழங்கப்பட்டுள்ளன.
- கிளினிக்ககளை நடாத்திச் செல்லுவதற்கு தேவையான அடிப்படைத் தேவைப்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- இந்த சகல கிளினிக்குகளும் அரசாங்க கட்டடங்களில் நடாத்துவதற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

### கிளினிக்குகளின் வினைத்திறன்

மருத்துவ சபையினால் கண்காணிக்கப்படுகின்ற பின்வரும் 07 கிளினிக்குகளின் ஊடாக 50353 நோயாளிகள் இந்த ஆண்டுக்குள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

| கிளினிக்கு | நோயாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. தெஹிவளை | 7965 |
| 2. மொணறாகல | 5736 |
| 3. பாலமுனை | 8753 |
| 4. மாத்தளை | 6461 |
| 5. குருநாகல் | 8313 |
| 6. பரகடுவ | 7854 |
| 7. தோலங்கமுவ | 5271 |
| **மொத்தம்** | **50353** |

## **10-2** இடைக்கால குழு

2014 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வண்ணம் 5 உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கால குழு நியமிக்கப்பட்டது.

இதன் உறுப்பினர்கள்

1. சுதேச மருத்துவத்துறை அமைச்சு கலாநிதி (திரு) நிவ்டன் பீரிஸ். - தலைவர்
2. பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் (திரு) கே.கே.டீ.எஸ். ரணவீர –உறுப்பினர்.
3. சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பிரதான கணக்காளர் திருமதி எம் டீ ஆர் சீ சித்திரலதா – உறுப்பினர்.
4. மருத்துவர் (திரு) எம் எவ் பயாஸ் – உறுப்பினர்.
5. மருத்துவர் (திருமதி) ஈ எம் சுபுன் மினிமேகலா – உறுப்பினர்.

### இடைக்கால குழுவின் மாற்றங்கள்

திருமதி சித்திரலதா மார்ச்சு மாதம் அவரது பதவியிலிருந்து விலகினார். இருந்தாலும் இடைக்காலக் குழுவுக்காக புதிய மூன்று அங்கத்தவர்கள் மே மாதம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்டதுடன் இதில் மீண்டும் திருமதி எம் டீ ஆர் சீ சித்திரலதா நியமிக்கப்பட்டார். இதன் பிரகாரம்

01.சுதேச மருத்துவத்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிருவாகம்) திருமதி விஜிதா செனவிரத்ன – உறுப்பினர்.

02.சுதேச மருத்துவத்துறை அமைச்சின் பிரதான கணக்காளர் திருமதி எம் டீ ஆர் சீ சித்திரலதா – உறுப்பினர்.

03. சட்டத்தரணி (திரு) ஈ எம் பராக்கிரம ஏக்கநாயக்க – உறுப்பினர்

மேலே பெயர் குறிப்பிட்டவர்கள் இடைக்கால குழுவில் நியமிக்கப்பட்டதன் அடிப்படையில் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 07 ஆக அதிகரித்தது. மருத்துவர் (திரு) எம் எவ் பயாஸ் அஹமட் மற்றும் மருத்துவர் ஈ எம் (திருமதி) சுபுன் மினிமேகலா ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு நவம்பர் மாதம் இடைக்காலக் குழுவிலிருந்து விலகினர்.

## இடைக்கால குழுக் கூட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2014.01.08 | - | 22 வது கூட்டம் | |
| 02. 2014.01.18 | - | விசேட கூட்டம் | |
| 03. 2014.03.27 | - | 23 வது கூட்டம் | |
| 04. 2014.04.28 | - | 24 வது கூட்டம் | |
| 05. 2014.05.08 | - | விசேட கூட்டம் | I |
| 06. 2014.05.16 | - | விசேட கூட்டம் | II |
| 07. 2014.05.27 | - | 25 வது கூட்டம் | |
| 08. 2014.06.24 | - | 26 வது கூட்டம் | |
| 09. 2014.07.21 | - | 27 வது கூட்டம் | |
| 10. 2014.10.14 | - | 28 வது கூட்டம் | |
| 11. 2014.12.31 | - | 29 வது கூட்டம் | |

இந்த ஆண்டுக்குள் 3 கூட்டங்களும் 11 இடைக்காலக் குழுக் கூட்டங்களும் மாத்திரமே நடத்த முடிந்தது.

# 10-3 ஹோமியோபதி மருத்துவ சபை ஆளணி மற்றங்களும் புதிய ஆட்சேர்ப்புக்களும்

| | பதவி | எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 01. | பதிவாளர் | 01 | |
| 02 | மருத்துவ தொழில் சார்பாளர்கள் | 07 | (ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவ தொழில் சார்பாளர்களின் சேவை 2014.12.31 ஆந் திகதியுடன் முடிவடைந்தது.) |
| 03 | முகாமைத்துவ உதவியாளர் | 01 | (ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்தில் சேவையாற்றிய செல்வி என் பீ ஜீ ஜே பீ பல்லியகுரு 2014.06.16 ஆந் திகதி சேவையிலிருந்து விலகியுள்ளார்.) |
| 04 | மருந்து கலவையாளர் | 07 | |
| 05 | அலுவலக உதவியாளர் | 02 | (ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்திற்கு உதவியாளர்களாக இருவர் 2014.08.01 ஆந் திகதி தொடக்கம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.) |
| | **மொத்தம்** | **18** | |

## 10-4 ஆட்சேர்ப்புத் திட்டமும் ஆளணி மாற்றங்களும்

- ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்துக்கு நாட் சம்பள அடிப்படையில் சேவையாற்றிய அமய அலுவல உதவியாளர் திரு எம் பீ பிரசன்ன சுஜித் குமார 2014.01.02 ஆந் திகதி சேவையிலிருந்து விலகியுள்ளதுடன் திரு ஏ எச் சம்பத் அல்கம 2014.01.22 ஆந் திகதி தொடக்கம் சேவையிலிருந்து விலகியுள்ளார்.

- ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்தில் சேவையாற்றிய செல்வி என் பீ ஜீ ஜே பீ பல்லியகுரு 2014.06.16 ஆந் திகதி சேவையிலிருந்து விலகியுள்ளார்.
- அலுவலக உதவியாளர்களாக எஸ் ஏ ரவி நிசாந்த குமார மற்றும் ஆர் எச் ஏ திலின மதுசங்க 2014.08.01 ஆந் திகதி தொடக்கம் ஹோமியோபதி மருத்துவ சபை அலுவலகத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

- 2014.11.21 ஆந் திகதி பயிலுநர் உத்தியோகத்தராக சேவையைப் பெற்றுக் கொள்ளுவதற்காக செல்வி எல் டப்லிவ் சமாதி சுலோசனா பெரேரா ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.

- ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஹோமியோபதி மருத்துவ தொழில் சார்பாளர்களின் சேவை 2014.12.31 ஆந் திகதியுடன் நிறைவடைந்தது. இதற்காக ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது.

- ஹோமியோபதி கிளினிக்குகளுக்காக மருந்து கலவையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது கட்டாய தகைமையாக காட்டப்பட்டுள்ள NVQ II மட்டத்திலான சான்றிதழை வழங்கக் கூடிய பாடநெறியை ஆரம்பிப்பதற்கு தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 10-5 தரவுகளும் தற்போதைய தகவல்களும்

2014 ஆண்டுக்கான பதிவை இற்றைவரைப்படுத்திய மருத்துவர்களின் பெயர்ப் பட்டியல்

| வகுதி | பட்டதாரி | டிப்ளோமா | பொது | பதிவு செய்யப்பட்ட மொத்த மருத்துவர்கள் | பதிவை உறுதிப்படுத்த வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|---|
| 27-1-ய | 04 | 39 | | 43 | 02 |
| 27-1-டி | 04 | | | 04 | |
| 27-1-உ | | | 19 | 19 | |
| 27-2 | | | 43 | 43 | |
| 27-5 | | | 43 | 43 | |
| மொத்தம் | 08 | 39 | 105 | 152 | 02 |

### பொழிப்பு

| | பதிவு செய்யப்பட்ட மருத்துவர் | முறையாக பதிவு செய்யப்படாத | 2013 திசெம்பர் வரை பதிவை இற்றைவரைப்படுத்திய | 2013 திசெம்பர் வரை பதிவை இற்றைவரைப்படுத்தாத | மரணித்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| மொத்த எண்ணிக்கை | 197 | 02 | 113 | 39 | 43 |

### புதிய மருத்துவர்களுக்கான பதிவை வழங்குதல்.

- 1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஹோமியோபதி சட்டத்தின் 27 (1) C பிரிவின் கீழ் ஹோமியோபதி மருத்துவர்களை பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. விசேட குழுவின ஊடாக நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய 92 பேரில் 47 பேர் பொதுப் பட்டியலில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- சட்டத்தின் 27 (5) பிரிவின் கீழ் தற்காலிக மருத்துவர்களை பதிவு செய்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்த 19 பேர் பொதுப் பட்டியலில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 10-6 மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக மருத்துவ தொழில் சார்பாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

- 2014 சனவரி தொடக்கம் திசெம்பர் 30 வரை மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 15 கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

- இதன் மொத்த பெறுமதி
  US $ 36857.13
  INDIAN RS 137113.00

## 10-7 நிதிமன்ற நடவடிக்கைகள

### உயர் நிதிமன்றம்

**1. FR / SC / 891 / 2009 மற்றும் FR / SC / 965 / 2009 இலக்க வழக்கு.**

2009 ஆம் ஆண்டு மருத்துவ சபையில் இருந்த உறுப்பினர்களை கௌரவ அமைச்சரினால் பதிவிகளிலிருந்து நீக்கியமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள் வழக்கு மற்றும் அதனோடு இணைந்து மருத்துவ சபையை உடனடியாக மீள நிறுவுவதற்குத் தேவையான கட்டளையொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்துள்ள விசாரணையில் உள்ளது.

2. **FR / 187 / 2013 இலக்க வழக்கு.**

2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தற்காலிகமாக பதிவு செய்த ஹோமியோபதி மருத்துவர்கள் பொதுவான பட்டியலில் பதிவு செய்து கொள்ளுவதற்காக ஹோமியோபதி இடைக்கால குழுவிற்கு கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 187/2013 (F/R) வழக்கின் தீர்ப்பு 2013-06-13 ஆந் திகதி வழங்கப்பட்டது. இதன் மூலம் மனுதாரர்களின் கோரிக்கைகளுக்கு இடமளித்து 06 மாத காலத்துக்குள் உரிய பரீட்சையை நடாத்தி பதிவுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும், அத்துடன் இதற்கான பதிவுகள் முடிவடையவிருந்த 2013-11-30 ஆந் திகதி தொடக்கம் 06 மாதங்கள் முன்னோக்கியதாக அவர்களது தற்காலிக பதிவுக் காலத்தை நீடிப்பதற்கம் கட்டளையிடப்பட்டது.

**3. FR / SC / 129/ 2014 இலக்க வழக்கு.**

2014 ஜனவரி மாதம் ஹோமியோபதி இடைக்கால குழுவின் ஊடாக பதிவு செய்யப்பட்ட 47 மருத்துவர்களின் பதிவை இரத்துச் செய்யுமாறும் ஹோமியோபதி தற்காலிக மருத்துவர்களை பொதுவான பட்டியலில் பதிவு செய்து கொள்ளுவதற்காக பரீட்சை நடத்துவதற்கு ஹோமியோபதி இடைக்காலக் குழுவுக்கு அனுமதி வழங்கக் கூடாது எனவும் ஹோமியோபதி இடைக்காலக் குழுவை இல்லாதொழிக்குமாறும் கட்டளையை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்த வழக்கு விசாரணையில் உள்ளது.

4. ஹோமியோபதி தற்காலிக மருத்துவர்களுக்கான பரீட்சையை நடத்துவதற்கு இடைக்காலக் குழுவுக்கு இடமளிக்காது ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவும் வரைக்கும் ஒத்திவைக்குமாறு கோரி ஹோமியோபதி மூன்று தற்காலிக மருத்துவர்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விசாரணையில் உள்ளது.

## மேல்முறையீட்டு நீதிமன்றம்

### 1. 87/2013 இலக்க வழக்கு

87/2013 இலக்க மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு ஹோமியோபதி இடைக்காலக் குழுவினால் ஹோமியோபதி பட்டதாரி மருத்துவர்களை ஹோமியோபதி மருத்துவ சபையில் பதிவு செய்வதை தடை விதிக்கும் தீர்மானம் ஒன்றை வழங்குமாறு தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்ந்தும் விசாரணையில் உள்ளது.

### 2. 146/2014 இலக்க வழக்கு

ஹோமியோபதி தற்காலிக மருத்துவர்களின் பதிவை நீடித்தல் மற்றும் ஹோமியோபதி 1970 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் 27(1) இ பிரிவின் கீழ் பதிவை எதிர்பார்த்து நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாது மீண்டும் பதிவைக் கோரி மேன்முறையீடு சமர்ப்பித்த மருத்துவர்களின் மேன்முறையீட்டை ஏற்றுக் கொள்ளுமாறு கட்டளை பிறப்பிக்குமாறு தாக்கல் செய்த வழக்கு விசாரணையின் போது பதிவுக்காக உரிய பரீட்சையை நடத்துவதற்கும் இதற்காக 6 மாத காலத்துக்க அவர்களின் பதிவை நீடிப்பதற்கும் மேன்முறையீடு செய்துள்ளவர்களின் மேன்முறையீட்டை ஏற்றுக் கொள்ளுமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பொன்றைப் பிறப்பித்துள்ளது.

**3. CA/185/14 இலக்க வழக்கு**

ஹோமியோபதி சட்டத்தின் 27(1) இ பிரிவின் கீழ் பதிவைப் பெற்றுக் கொள்ள முடியாதுபோன மருத்துவர்களினால் இந்தப் பிரிவின் கீழ் பதிவைப் பெற்றுக் கொள்ளுவதற்காக விண்ணப்பங்களைக் கோருமாறும் ஹோமியோபதி சட்டத்தின் 27(5) பிரிவின் கீழ் பொதுப் பட்டியலில் பதிவு செய்து கொள்ளுவதற்கு தகுதி வாய்ந்த மருத்துவர்களுக்கு பரீட்சையொன்றை நடத்துமாறு கட்டளையிடுமாறு கோரி தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## மாவட்ட நீதிமன்றம்

**1. 31/52/2010 இலக்க வழக்கு**

மருத்துவ சபை அலுவலகத்தின் அலுவலக உதவியாளராக சேவையாற்றிய ஈ எம் ஆர் டீ சேரம் என்பவர் சேவையிலிருந்து விலக்கியதற்கு எதிராக மருத்துவ சபையை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்த வழக்கு, இந்த மனுதாரரினாலேயே நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கெழு காரணத்தின் அடிப்படையில் அதாவது " பதவி வெறிதாக்கல்" மீது ஹோமியோபதி மருத்துவ சபை, சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் இன்னும் சிலரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு தாக்கல் செய்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் வரைக்கும் தொழில் நியாய சபையில் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது.

# 11. கணக்காய்வு அறிக்கை

2014 ஆம் ஆண்டாகும் போது ஹோமியோபதி மருத்துவப் பேரவை நிறுவப்பட்டிருக்கவில்லை ஆதலால் இந்த ஆண்டுக்குள் இதன் பணிகளை நெறிப்படுத்தியது ஹோமியோபதி இடைக்காலக் குழுவினாலாகும். நிதி நடவடிக்கைகள் சுதேச மருத்துவ அமைச்சினால் நெறிப்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்று, நிதிச் செயலாற்றுகைக் கூற்று, இணைந்த நிதிப் பாய்ச்சல் கூற்று, மீதிப் பரிசோதனை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் பதவியணிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான பதவியணியைத் தயாரித்தல், பதவியணிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு செயற்படுவதன் மூலம் மருத்துவர்களை பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக, ஹோமியோபதி மருத்துவ முறையைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான மனித வளங்களை விரித்தி செய்வதற்காக இந்த ஆண்டுக்குள் ஹோமியோபதி இடைக்காலக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சினால் வரைவு செய்யப்பட்ட புதிய ஹோமியோபதி சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொண்டு ஹோமியோபதி மருத்தவப் பேரவையை துரிதமாக நியமிக்கும் எதிர்பார்ப்புடன் உள்ள இடைக்காலக் குழு புதிய பேரவை நியமிக்கப்படும் வரைக்கும் இதன் பணிகளை மேற்கொண்டு தேவையானவாறு செயற்படுகின்றது.

கலாநிதி நிவ்டன் ஏ பீரிஸ்,
தலைவர்,
ஹோமியோபதி இடைக்காலக் குழு.

# ஆசிகள்

★★★★

கௌரவ  சுதேச மருத்துவ அமைச்சர்

கௌரவ பிரதி அமைச்சர்

மருத்துவ சபை அங்கத்தவர்கள்

செயலாளர் மற்றும் பிரதிச் செயலாளர்கள்

ஹோமியோபதி இடைக்கால குழுவின் தலைவர்

இடைக்காலக் குழு அங்கத்தவர்கள்

சட்ட மா அதிபர் திணைக்களம்

கணக்காய்வாளர் திணைக்களம்

ஹோமியோபதி மருத்துவ சபை பதிவாளர்

மற்றும்

பதவியணியினர்

# ஹோமியோபதி மருத்துவ சபை

## 2014 திசெம்பர் 31 திகதியன்றுக்கான நிதிக்கூற்று

| | 2014 | 2015 |
|---|---|---|
| சொத்துக்கள் | ரூபா | ரூபா |
| அசையும் சொத்து குறிப்பு 1 | | |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 2,124,884.00 | 1,828,095.00 |
| ஆசையா சொத்துக்கள் குறிப்பு 2 | | |
| பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 1,295,606.00 | 874,955.00 |
| கட்டட புனரமைப்பு செலவினம் | 953,828.00 | 953,828.00 |
| வேறு உபகரணங்கள் | 1,450.00 | |
| | 2,250,884.00 | 1,828,783.00 |
| மொத்த சொத்துக்கள் | 4,375,768.00 | 3,656,878.00 |
| வரவுகள் | | |
| அசையும் வரவுகள் | | |
| செலுத்தப்பட வேண்டியவைகள் குறிப்பு 3 | 526,036.00 | 235,284.00 |
| ஆசையா வரவுகள் | | |
| மொத்த வரவுகள் | 526,036.00 | 235,284.00 |
| தேறிய சொத்துக்கள் | **3,849,732.00** | **3,421,594.00** |
| | 4,375,768.00 | 3,656,878.00 |
| தேறிய சொத்துக்கள்/ அரச பாகம் | | |
| மூலதனம் | 2,562,144.00 | 2,562,144.00 |
| அரச மூலதன ஒதுக்கீடுகள் | 1,572,047.00 | 973,273.00 |
| திரண்ட குறைபாடுகள் | (311,918.00) | (141,282.00) |
| முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கு | 27,459.00 | 27,459.00 |
| தேறிய சொத்துக்கள்/அறிக்கை | **3,849,732.00** | **3,421,594.00** |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | ஒப்பம் | குழு உறுப்பினர் | தயாரித்தது |
| பதிவாளர் | தலைவர் | ஹோமியோபதி | கணக்காளர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | மருத்துவ சபை | ஹோமியோபதி |
| மருத்துவ சபை | மருத்துவ சபை | | மருத்துவப் பிரிவு |

| குறிப்பு - | 2014 | 2013 |
|---|---|---|
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | | |
| கொமர்ஷல் வங்கி | 1,483,419.00 | 1,405,167.00 |
| இலங்கை வங்கி | 445,565.00 | 422,928.00 |
| இலங்கை வங்கிஇ ராஜகிரிய | 195,900.00 | - |
| | 2,124,884.00 | 1,828,095.00 |
| குறிப்பு- பொறித் தொகுதியும் உபகரணங்களும் | | |
| பொறித் தொகுதியும் உபகரணங்களும் | | |
| பொறித் தொகுதியும் உபகரணங்களும் (கொள்வனவு விலை) | 2,323,316.00 | 1,725,992.00 |
| கழிக்கப்பட்டது | | |
| திரட்டிய தேய்மானங்கள் | 1,027,710.00 | 851,037.00 |
| தேறிய பெறுமதி | 1,295,606.00 | 874,955.00 |
| (3) குறிப்பு | | |
| செலுத்தப்பட வேண்டியவைகள் | | |
| செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் | | 17,550.00 |
| செலுத்தப்பட வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | | 2,633.00 |
| செலுத்தப்பட வேண்டிய மருந்தக கட்டணங்கள் | 25,200.00 | 16,200.00 |
| செலுத்தப்பட வேண்டிய மருத்துவ சபை கூட்டங்களின் கட்டணங்கள் | 16,000.00 | 20,000.00 |
| செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் | 125,616.00 | 85,616.00 |
| செலுத்தப்பட வேண்டிய தொலைபேசி கட்டணங்கள் | 7,245.00 | 3,937.00 |
| செலுத்தப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் | 624.00 | 1,240.00 |
| செலுத்தப்பட வேண்டிய போக்குவரத்து கட்டணங்கள் | 4,001.00 | 2,053.00 |
| செலுத்தப்பட வேண்டிய நீர்க் கட்டணங்கள் | 1,607.00 | 10,156.00 |
| செலுத்தப்பட வேண்டிய ஆளணி சம்பளங்களும் படிகளும் | 11,324.00 | 59,155.00 |
| செலுத்தப்பட வேண்டிய அலுவலக உபகரண திருத்தங்கள் | | 16,744.00 |
| செலுத்தப்பட வேண்டிய உபசரிப்புச் செலவுகள் | 796.00 | |
| செலுத்தப்பட வேண்டிய மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 22,213.00 | |
| செலுத்தப்பட வேண்டிய காகிதாதிகள் செலவினங்கள் | 780.00 | |
| செலுத்தப்பட வேண்டிய ஹோமியோபதி பரீட்சைக்கான செலவுகள் | 310,630.00 | |
| | 526,036.00 | 235,284.00 |

(4) குறிப்பு கணக்குகளை சமர்ப்பித்தல்
இலங்கை அரச பிரிவு கணக்கியல் தரம் (2009) “ 01” க்கு அமைவாக

(5) குறிப்பு –தேய்மான முறை
- சுகல நிலையான சொத்துக்களினதும் பெறுமானத் தேய்வ மீதி முறை அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது
- தேய்மான நூற்றுவீதம் 12%
- சொத்துக்கள் ஆண்டின் எந்த தினத்தில் கொள்வனவு செய்யப்பட்டாலும் இது உரிய முழுமையான ஆண்டுக்கும் தேய்மானம் கணக்கிடப்படும்
- சொத்துக்கள் ஆண்டின் எந்த தினத்தில் அகற்றப்பட்டாலும் இது உரிய முழுமையான ஆண்டுக்கும் தேய்மானம் கணக்கிடப்படமாட்டாது.

# ஹோமியோபதி மருத்துவப் பேரவை

## நிதிச் செயலாற்றுகைக் கூற்று

## 2014 திசெம்பர் 31 திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கானவை

| | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| **வருவாய்** | | | |
| அரச மீண்டுவரும் ஒதுக்கீடு | | 6,228,080.00 | 5,806,790.00 |
| வேறு வருவாய்கள் | 1 | 218,537.00 | 34,220.00 |
| வங்கி வட்டி | | 85,056.00 | 112,419.00 |
| **மொத்த வருவாய்** | | 6,531,673.00 | 5,953,429.00 |
| **செலவினங்கள்** | | | |
| சம்பளங்களும் ஊதியங்களும் ஊழியர் நன்மைகளும் | 2 | 5,153,573.00 | 4,866,152.00 |
| வழங்களும் பயன்பாட்டுப் பொருட்களும் | 3 | 81,029.00 | 26,696.00 |
| தேய்மானமும் தேய்மான முறையும் | | 176,673.00 | 119,312.00 |
| வேறு செலவினங்கள் | 4 | 1,284,230.00 | 902,252.00 |
| சட்ட கட்டணங்கள் | | | 142,000.00 |
| நிதிச் செலவினங்கள் (வங்கிக் கட்டணங்கள்) | | 6,804.00 | 8,994.00 |
| **மொத்த செலவினங்கள்** | | 6,702,309.00 | 6,065,406.00 |
| **காலப்பகுதிக்கான குறைபாடுகள்** | | (170,636.00) | (111,977.00) |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | ஒப்பம் | குழு உறுப்பினர் | தயாரித்தது |
| பதிவாளர் | தலைவர் | ஹோமியோபதி | கணக்காளர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | மருத்துவ சபை | ஹோமியோபதி |
| மருத்துவ சபை | மருத்துவ சபை | | மருத்துவப் பிரிவு |

| குறிப்பு 1 ஏனைய பெறுகைகள் | 2014 | 2013 |
|---|---|---|
| ஏனைய பெறுகைகள் | | |
| வருடாந்தக் கட்டணங்கள் | 9,137.00 | 6,300.00 |
| நானாவித பெறுகைகள் | 13,500.00 | 27,920.00 |
| ஹோமியோபதி பரீட்சைக்கான கட்டணங்கள் | 195,900.00 | - |
| | 218,537.00 | 34,220.00 |
| குறிப்பு 2 | | |
| வேதனாதிகளும் ஊழியர் நலன்களும் | | |
| பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகள் | 4,127,805.00 | 4,015,142.00 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 890,125.00 | 741,022.00 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 135,643.00 | 109,988.00 |
| | 5,153,573.00 | 4,866,152.00 |
| குறிப்பு 3 | | |
| வழங்கலும் பயன்பாட்டுப் பொருட்களும் | | |
| காகிதாதிகள் செலவினங்கள் | 24,581.00 | 15,389.00 |
| உபசரிப்புச் செலவினங்கள் | 56,448.00 | 11,307.00 |
| | 81,029.00 | 26,696.00 |
| குறிப்பு 4 | | |
| ஏனைய செலவினங்கள் | | |
| நானாவித செலவினங்கள் | 50,131.00 | 117,509.00 |
| போக்குவரத்து செலவுகள் | 24,815.00 | 36,807.00 |
| மருந்தகக் கட்டணங்கள் | 151,020.00 | 153,650.00 |
| தபால் கட்டணங்கள் | 6,050.00 | 7,240.00 |
| மருத்துவ சபை கூட்டக் கட்டணங்கள் | 116,000.00 | 116,000.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 40,000.00 | 45,616.00 |
| நீர்க் கட்டணங்கள் | 48,582.00 | 43,175.00 |
| மின்சார கட்டணங்கள் | 11,310.00 | 13,721.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 66,368.00 | 50,396.00 |
| அச்சுக் கட்டணங்கள் | - | 45,000.00 |
| விளம்பரக் கட்டணங்கள் | - | 141,208.00 |
| அலுவலக உபகரண திருத்தங்கள் | 5,556.00 | 97,023.00 |
| தெயட்ட கிருள செலவுகள் | - | 20,306.00 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 46,381.00 | 14,601.00 |
| மருத்துவக் கிளினிக்குகளுக்கான உபகரணங்கள் | 34,000.00 | - |
| ஹோமியோபதி பரீட்சைக்கான செலவுகள் | 684,017.00 | - |
| | 1,284,230.00 | 902,252.00 |

(5) குறிப்பு கணக்குகளை சமர்ப்பித்தல்

இலங்கை அரச பிரிவு கணக்கியல் தரம் (2009) “ 01” க்கு அமைவாகவாகும் அவ்வாறே இதன் ” தன்மையின் மீது செலவினங்களை வகைப்படுத்தல்” என்றவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# ஹோமியோபதி மருத்துவப் பேரவை

## 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய நிதிப்பாய்ச்சல் கூற்று.

| தொழிற்படு செயற்பாட்டின் நிதிப் பாய்ச்சல்கள் | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| வரவு | | | |
| அரசாங்கத்திலிருந்து கிடைத்த மீண்டுவரும் ஒதுக்கீடுகள் | | 6,228,080.00 | 5,806,790.00 |
| வங்கி வட்டி | | 85,056.00 | 112,419.00 |
| ஏனைய வரவுகள் | 1 | 218,537.00 | 34,220.00 |
| செலவு | | 6,531,673.00 | **5,953,429.00** |
| ஆளணி செலவு | 2 | 5,221,587.00 | 4,828,814.00 |
| வங்கி வட்டி (வங்கி கட்டணங்கள்) | | 6,804.00 | 8,994.00 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 3 | 1,006,493.00 | 977,976.00 |
| | | 6,234,884.00 | **5,815,784.00** |
| **தொழிற்படு செயற்பாட்டின் தேறிய நிதிப் பாய்ச்சல்கள்** | | 296,789.00 | **137,645.00** |
| முதலீடு செயற்பாட்டின் நிதிப் பாய்ச்சல்கள் | | | |
| அரசாங்கத்திலிருந்து கிடைத்த மூலதன ஒதுக்கீடுகள் | | 597,324.00 | 973,273.00 |
| பொறித் தொகுதிகளும் உபகரணங்களும் கொள்வனவு செய்தல் | 4 | 597,324.00 | 973,273.00 |
| முதலீடு செயற்பாட்டின் தேறிய நிதிப் பாய்ச்சல்கள் | | | |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | 5 | 296,789.00 | 137,645.00 |
| காலப்பகுதியில் ஆரம்பமான நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 6 | 1,828,095.00 | 1,690,450.00 |
| காலப்பகுதி முடிவின் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 7 | 2,124,884.00 | 1,828,095.00 |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| ஒப்பம் | ஒப்பம் | குழு உறுப்பினர் | தயாரித்தது |
| பதிவாளர் | தலைவர் | ஹோமியோபதி | கணக்காளர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | மருத்துவ சபை | ஹோமியோபதி |
| மருத்துவ சபை | மருத்துவ சபை | | மருத்துவப் பிரிவு |

| | 2014 | 2013 |
|---|---|---|
| குறிப்பு 1 - ஏனைய வரவுகள் | | |
| நானாவித வருமானங்கள் | 9,137.00 | 22,370.00 |
| வருடாந்தக் கட்டணம் | 13,500.00 | 11,850.00 |
| ஹோமியோபதி பரீட்சைக் கட்டணம் | 195,900.00 | |
| | 218,537.00 | 34,220.00 |
| குறிப்பு 2 – ஊழியர் செலவினங்கள் | | |
| பதவியணி சம்பளங்களும் படிகளும் | 4,175,636.00 | 3,997,987.00 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 907,675.00 | 723,472.00 |
| ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 138,276.00 | 107,355.00 |
| | **5,221,587.00** | **4,828,814.00** |
| குறிப்பு 3 – ஏனைய கொடுப்பனவுகள் | | |
| நானாவித செலவினங்கள் | 50,131.00 | 117,509.00 |
| காகிதாதிகள் | 23,801.00 | 15,389.00 |
| போக்குவரத்துச் செலவுகள் | 22,867.00 | 34,754.00 |
| மருந்தகக் கட்டணஙகள் | 142,020.00 | 151,850.00 |
| தபால் கட்டணங்கள் | 6,050.00 | 7,240.00 |
| மருத்துவப் பேரவைக் கூட்டக் கட்டணங்கள் | 120,000.00 | 96,000.00 |
| உபசரிப்புக் கட்டணங்கள். | 55,652.00 | 11,307.00 |
| நீர்க் கட்டணங்கள் | 57,131.00 | 33,587.00 |
| மின்சாரக் கட்டணங்கள். | 11,926.00 | 13,208.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 63,060.00 | 53,738.00 |
| அச்சகக் கட்டணங்கள் | - | 45,000.00 |
| விளம்பரக் கட்டணங்கள் | - | 141,208.00 |
| அலுவலக உபகரணங்கள் பழுது பார்த்தல் | 22,300.00 | 80,279.00 |
| தெயட கிருள செலவினங்கள் | - | 20,306.00 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 24,168.00 | 14,601.00 |
| சட்டச் செலவினங்கள் | - | 142,000.00 |
| ஹோமியோபதி பரீட்சைக்கான செலவுகள் | 373,387.00 | - |
| மருத்துவக் கிளினிக்குகளுக்கான உபகரணங்கள் | 34,000.00 | - |
| | 1,006,493.00 | 977,976.00 |
| குறிப்பு 4 – பொறித் தொகுதியும் உபகரணங்களும் கொள்வனவு செய்தல். | | |
| துவிச்சக்கர வண்டி கொள்வனவு செய்தல் | | 10,845.00 |
| தண்ணீர் பில்டர் ஒன்று கொள்வனவு செய்தல் | | 8,600.00 |
| கட்டட புனரமைப்புச் செலவுகள் | | 953,828.00 |
| கணனி (எச்பீ) | 119,900.00 | |
| காது, தொண்டை , மூக்கு போன்றன பரிசோதனை செய்வதற்கான உபகரணம் | 140,000.00 | |
| நிறையை அளக்கும் தராசு | 4,000.00 | |
| சீலிங் மின் விசிரி | 24,430.00 | |

| | | |
|---|---|---|
| மின் விசிறி (ீனநளவயட) | 33,250.00 | |
| கதிரை (சுற்றும்) | 37,632.00 | |
| சாய் கதிரை (குயடிசஉை ஊரளாழைெ) | 159,712.00 | |
| இரும்பு அலுமாலி | 43,680.00 | |
| சாய் கதிரை (பிளாஸ்டிக்) | 15,120.00 | |
| தேக்கு மேசை 5"3 (இரண்டு லாச்சு) | 19,600.00 | |
| | 597,324.00 | 973,273.00 |
| குறிப்பு 5 – நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | | |
| வருட இறுதி நிதி மீதி | 2,124,884.00 | 1,828,095.00 |
| வருட ஆரம்ப நிதி மீதி | 1,828,095.00 | 1,690,450.00 |
| | 296,789.00 | 137,645.00 |
| குறிப்பு 6 – காலப் பகுதியின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் | | |
| கொமர்ஷல் வங்கி | 1,405,167.00 | 1,301,742.00 |
| இலங்கை வங்கி | 422,928.00 | 388,708.00 |
| | 1,828,095.00 | **1,690,450.00** |
| குறிப்பு 7 - காலப் பகுதியின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் | | |
| கொமர்ஷல் வங்கி | 1,483,419.00 | 1,405,167.00 |
| இலங்கை வங்கி | 445,565.00 | 422,928.00 |
| இலங்கை வங்கி ராஜகிரிய | 195,900.00 | |
| | 2,124,884.00 | 1,828,095.00 |
| | 296,789.00 | 137,645.00 |
| குறிப்பு 8 – பொதுச் செயற்பாடுகளின் தேறிய மேலதிகம் ∴ (குறைபாடுகள்) தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் தேறிய நிதிப் பாய்ச்சலுடன் ஒப்பிடுதல் | | |
| சமமான செயற்பாடுகளின் தேறிய மேலதிகம் ∴ (குறைபாடுகள்) | (170,636.00) | (111,977.00) |
| தேய்மானம் | 176,673.00 | 119,312.00 |
| செலுத்தப்பட வேண்டிய செலவு அதிகரிப்பு (குறிப்பு 9) | 290,752.00 | 130,310.00 |
| முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கின் ஆண்டுக்கான மாற்றங்கள் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் தேறிய நிதிப் பாய்ச்சல் | | |
| | 296,789.00 | 137,645.00 |

குறிப்பு (9) செலுத்தப்பட வேண்டிய செலவுகளின் அதிகரிப்பு

| | 2013 மற்றும் 2014 ஆண்டின் ஒப்பீடு | | |
|---|---|---|---|
| | வருடாந்த குறைவுகள் | வருடாந்த குறைவுகள் | வருடாந்த குறைவுகள் |
| - செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் | 17,550.00 | | |
| - செலுத்தப்பட வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | 2,633.00 | | |
| -செலுத்தப்பட வேண்டிய மருந்தக கட்டணங்கள் | | 9,000.00 | |
| - செலுத்தப்பட வேண்டிய மருத்துவ சபை கூட்டங்களின் கட்டணங்கள் | 4,000.00 | | |
| - செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணங்கள் | | 40,000.00 | |
| - செலுத்தப்பட வேண்டிய தொலைபேசி கட்டணங்கள் | | 3,308.00 | |
| - செலுத்தப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் | 616.00 | | |
| - செலுத்தப்பட வேண்டிய போக்குவரத்து கட்டணங்கள் | | 1,948.00 | |
| - செலுத்தப்பட வேண்டிய நீர்க் கட்டணங்கள் | 8,549.00 | | |
| - செலுத்தப்பட வேண்டிய ஆளணி சம்பளங்களும் படிகளும் | 47,831.00 | | |
| - செலுத்தப்பட வேண்டிய அலுவலக உபகரண திருத்தங்கள் | 16,744.00 | | |
| செலுத்தப்பட வேண்டிய உபசரிப்புச் செலவுகள் | | 796.00 | |
| செலுத்தப்பட வேண்டிய மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | | 22,213.00 | |
| செலுத்தப்பட வேண்டிய காகிதாதிகளுக்கான செலவினங்கள் | | 780.00 | |
| செலுத்தப்பட வேண்டிய ஹோமியோபதி பரீட்சைக்கான செலவுகள் | | 310,630.00 | |
| | 97,923.00 | 388,675.00 | 290,752.00 |

## முன்னைய காலப்பகுதியின் குறைபாடுகள் வெளிக்கொண்டு வருதல் மற்றும் நிவர்த்தி செய்தல்

| பேரேடு | | |
|---|---|---|
| | பற்று | வரவு |
| குறைபாட்டுக் கணக்குகள் | 52,119.00 | |
| முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கு | | 52,116.00 |
| தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்கு | | 3.00 |
| | 52,119.00 | 52,119.00 |
| குறிப்பு :<br>(2014 ஆம் ஆண்டுக்காகன ஹோமியோபதி மருத்துவப் பேரவையின் இறுதிக் கணக்கு ஒழுங்குபடுத்தும் போது தெரியவந்த 2013 ஆம் ஆண்டுக்கு உரியதான ஏற்பட்ட கணக்குக் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல். | | |

# ஹோமியோபதி மருத்துவப் பேரவை

| | 31.12.2014 ஆந் தினத்தன்று மீதி விசாரணைகள் | | 31.12.2013 ஆந் தினத்தன்று கணக்கு சரி பார்க்கப்பட்டதன் பின்னர் மீதி விசாரணைகள் | |
|---|---|---|---|---|
| | பற்று ரூ | வரவு ரூ | பற்று ரூ | வரவு ரூ |
| விபரங்கள் | | | | |
| தபால் கட்டணங்கள் | 6,050.00 | | 7,240.00 | |
| மருத்துவப் பேரவைக் கூட்டக் கட்டணங்கள் | 116,000.00 | | 116,000.00 | |
| அச்சகக் கட்டணங்கள் | | | 45,000.00 | |
| பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகள் | 4,127,805.00 | | 4,015,142.00 | |
| திரட்டிய பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகள் | | 11,324.00 | | 59,155.00 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 890,125.00 | | 741,022.00 | |
| திரட்டிய ஊழியர் சேமலாப நிதியம் | | | | 17,550.00 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 135,643.00 | | 109,988.00 | |
| திரட்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | | | | 2,633.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 66,368.00 | | 50,396.00 | |
| திரட்டிய தொலைபேசிக் கட்டணங்கள் | | 7,245.00 | | 3,937.00 |
| நானாவித செலவினங்கள் | 50,131.00 | | 117,509.00 | |
| போக்குவரத்துச் செலவினங்கள் | 24,815.00 | | 36,807.00 | |
| திரட்டிய போக்குவரத்துச் செலவினங்கள் | | 4,001.00 | | 2,053.00 |
| அலுவலக உபகரணங்கள் | 1,450.00 | | | |
| கிளினிக்குகளுக்கான உபகரணங்கள் | 34,000.00 | | | |
| அலுவலக உபகரணங்களைப் பழுது பார்த்தல். | 5,556.00 | | 97,023.00 | |
| நீர்க் கட்டணங்கள் | 45,582.00 | | 43,175.00 | |
| திரட்டிய நீர்க் கட்டணங்கள் | | 1,607.00 | | 10,156.00 |
| மின் கட்டணங்கள் | 11,310.00 | | 13,721.00 | |
| திரட்டிய மின் கட்டணங்கள் | | 624.00 | | 1,240.00 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 40,000.00 | | 45,616.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்காய்வுக் கட்டணங்கள் ஒதுக்கீடு | | 125,616.00 | | 85,616.00 |
| வங்கிக் கட்டணங்கள் | 6,804.00 | | 8,994.00 | |
| அரசாங்க ஒதுக்கீடு – மீண்டு வரும் | | 6,228,080.00 | | 5,806,790.00 |
| அரசாங்க ஒதுக்கீடு - மூலதனம் | | 1,572,047.00 | | 973,273.00 |
| மருந்தகக் கட்டணங்கள் | 151,020.00 | | 153,650.00 | |
| திரட்டிய மருந்தகக் கட்டணங்கள் | | 25,200.00 | | 16,200.00 |
| வருடாந்த தேய்மானம் | 176,673.00 | | 119,312.00 | |
| தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்கு | | 1,027,710.00 | | 851,037.00 |
| | | | | |
| வருடாந்தக் கட்டணமங்கள் | | 13,500.00 | | 11,850.00 |
| வங்கி வட்டி வருமானக் கட்டணங்கள் | | 85,056.00 | | 112,419.00 |
| நானாவித வருமானங்கள் | | 9,137.00 | | 22,370.00 |
| முன்னைய ஆண்டின் சீராக்கல் கணக்கு | | 27,459.00 | | 27,459.00 |
| நிதி மீதி – கொமர்ஷல் வங்கி | 1,483,419.00 | | 1,405,167.00 | |
| நிதி மீதி - இலங்கை வங்கி | 445,565.00 | | 422,928.00 | |
| சிறு நிதி | | | | |
| உபசரிப்புச் செலவினங்கள் | 56,448.00 | | 11,307.00 | |
| திரட்டிய உபசரிப்புச் செலவினங்கள் | | 796.00 | | |
| காகிதாதிகள் செலவினங்கள் | 24,581.00 | | 15,389.00 | |
| திரட்டிய காகிதாதிகள் செலவினங்கள் | | 789.00 | | |
| திரட்டிய மருத்துவப் பேரவைக் கூட்டக் கட்டணங்கள் | | 16,000.00 | | 20,000.00 |
| ஹோமியோபதி பரீட்சைக் கட்டணங்கள் | 684,017.00 | | | |
| திரட்டிய ஹோமியோபதி பரீட்சைக் கட்டணங்கள் | | 310,630.00 | | |
| விளம்பரக் கட்டணங்கள் | | | 141,208.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 46,381.00 | | 14,601.00 | |
| திரட்டிய மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | | 22,213.00 | | |
| திரட்டிய அலுவலக உபகரணங்கள் பழுது பார்த்தல் | | | | 16,744.00 |
| சட்டக் கட்டணங்கள் | | | 142,000.00 | |
| தெயட்ட கிருள செலவினங்கள் | | | 20,306.00 | |
| ஆதன பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் | 2,323,316.00 | | 1,725,992.00 | |
| கட்டட புனரமைப்புச் செலவினங்கள் | 953,828.00 | | 953,828.00 | |
| மூலதனக் கணக்கு | | 2,562,144.00 | | 2,562,144.00 |
| 31-12-2013 ஆந் தினத்தன்று குறைபாட்டு கணக்கு மீதி | 141,282.00 | | 29,305.00 | |
| மொத்தம் | **12,051,169.00** | **12,051,169.00** | **10,602,626.0** | **10,602,626.00** |

இந்த நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பை ஹோமியோபதி இடைக்கால குழு ஏற்றுக் கொள்ளுகின்றது என உறுதிப்படுத்துகின்றோம்.

ஒப்பம்

பதிவாளர்

ஹோமியோபதி

மருத்துவ சபை

ஒப்பம்

தலைவர்

ஹோமியோபதி

மருத்துவ சபை

குழு உறுப்பினர்

ஹோமியோபதி

மருத்துவ சபை

தயாரித்தது

கணக்காளர்

ஹோமியோபதி

மருத்துவப் பிரிவு

| திரள் மாற்றங்கள் | இருப்பு (ரூபா.) |
|---|---|
| ஆரம்ப மீதி ( 01.01.2014 ஆந் திகதிக்கு) | 2,562,144.00 |
| அரசாங்க மூலதன ஒதுக்கீடு | 1,572,047.00 |
| முன்னைய ஆண்டின் சீராக்கல் | 27,459.00 |
| திரட்டிய குறைபாடு/மிகை | (311,918.00) |
| ஆண்டின் இறுதி மீதி ( 31.12.2014 ஆந் திகதிக்கு) | 3,849,732.00 |
| | |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எச்எம்/பீ/எச்எம்சீ/1/14/02 — මබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 2015 ஒக்தோபர் 12

தலைவர்,

ஹோமியோபதி வைத்திய சபை

**ஹோமியோபதி வைத்திய சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

ஹோமியோபதி வைத்திய சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2015 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹோமியோபதி வைத்திய சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

அரசின் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் காலக்கழிவு தொடர்பாக கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,572,047 தொகையான மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 1,494,531 ஆக இருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 34,000 கிரயத்திலான மருத்துவ உபகரணங்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீண்டெழும் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் ஆதனங்கள், பொறிகளும் உபகரணங்களும் அப்பெறுமானத்தினால் முறையே கூடுதலாகவும் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | வரைவு ஆண்டறிக்கையொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 395(ஈ) | ஒவ்வொரு மாத இறுதியின் போதும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளிலிருந்தான செயற்பாட்டு விளைவு ரூபா 170,636 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 111,977 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 58,659 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

90

## 3.2 நிறுவகத்திற்கு எதிரான சட்டரீதியான நடவடிக்கைகள்

வைத்திய சபையில் சேவை புரிந்த உத்தியோகத்தரொருவரால் அவரை சேவையிலிருந்து நீக்கியமைக்கு எதிராக ரூபா 3,000,000 நட்டஈடு கோரி வழக்கொன்று தொடுத்திருந்ததுடன், நிறுவனத்தினால் வெவ்வேறு தரப்பினருக்கு 06 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மீளாய்வாண்டிலும் முடியாது போயிருந்தது.

(i) ஹோமியோபதி வைத்திய முறைமைக்கான ஆராய்ச்சிகள் மற்றும் கற்கைகளை வலுப்படுத்தல்.

(ii) ஹோமியோபதி மருந்து உற்பத்தி, இறக்குமதி, விற்பனை மற்றும் விநியோகத்தலுக்காக நியதிச்சட்டங்களை இயற்றுதல்.

(ஆ) நாட்டில் ஏழு பிரதேசங்களில் நடாத்தப்படுகின்ற ஏழு சிகிச்சை நிலையங்களில் நோயாளர்களின் வருகை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 31 சதவீதத்திலிருந்து 1.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த வைத்தியர்களின் சேவைக்காலம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக அவ்வைத்தியர்களின் எதிர்ப்பு இந்நிலைமைக்கு காரணமொன்றாக இருப்பதாக இடைக்காலக் குழுவின் தலைவரால் பதில் அளிக்கப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோமியோபதி தற்காலிக மருத்துவர்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த 212 பேர்களால் ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 27(5) ஆம் பிரிவின் பிரகாரம் பரீட்சையொன்றை நடாத்தி வழமையான பதிவேட்டில் பதிவுசெய்யுமாறு உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. அவ்வழக்கின் தீர்ப்பின் மூலம் விதிக்கப்பட்ட எழுத்துமூல பரீட்சைக்காக பத்திரிகை அறிவித்தல் கட்டணமாக ரூபா 155,680 தொகையும் பரீட்சை நடாத்தும் செலவினமாக ரூபா 684,017 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 212 மருத்துவர்களில் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் 38 பேர் மாத்திரம் பரீட்சைக்காக விண்ணப்பித்திருந்ததுடன், 19 பேர் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

(ii) இதன் பிரகாரம் தனிப்பட்ட முகவரிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மருத்துவர்களுக்கு பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்ததா என்பது தொடர்பாக கணக்காய்வின் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(ஆ) இடைக்காலக் குழுக் கூட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்ட பின்வரும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) 2012 சனவரி 05 ஆந் திகதிய கூட்டத்தின் போது ஏழு சிகிச்சை நிலையங்களிற்கான பொதுவான பணிப்புரை வழிகாட்டலொன்றை தயாரிப்பதற்கு எடுத்த தீர்மானம்.

(ii) 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய கூட்டத்தின் போது 14 புதிய சிகிச்சை நிலையங்களிற்கான பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும், ஹோமியோபதி கல்வி நிறுவகம் தொடர்பான விதிகள் மற்றும் தேவைப்பாடுகளை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு எடுத்த தீர்மானம்.

(iii) 2014 சனவரி 08 ஆந் திகதிய கூட்டத்தின் போது ஹோமியோபதி மருந்து உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பான 1981

92

இன் ஹோமியோபதி கட்டளைகளை மேலும் விரிவுபடுத்தி போதியளவில் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றை தயாரிப்பதற்கு எடுத்த தீர்மானம்.

**4.3 விளைவற்ற சொத்துக்கள்**

2009 ஆம் ஆண்டின் போது ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,199,254 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்களும், அதற்குரிய கட்டிடங்களும் மற்றும் மீளாய்வாண்டில் சிகிச்சைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 173,506 பெறுமதியான நிலையான சொத்துக்கள் என்புன 2015 யூலை 20 ஆந் திகதி வரையிலும் சபையில் விளைவற்ற விதத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியினர் 18 ஆக இருந்தமையால் முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்று பற்றாக்குறையாக இருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிலும் ஹோமியோபதி வைத்திய சபை இடைக்காலக் கட்டுப்பாட்டுக் குழுவின் கீழ் செயற்படுத்தப்பட்டதுடன் சபையின் சகல செலவினங்களும் உள்நாட்டு வைத்திய அமைச்சினால் உரிய செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவினங்களினதும் கூட்டுத்தொகைக்குச் சமனான தொகை வைத்திய சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளாகக் கருதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் செயன்முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

(அ) ஹோமியோபதி வைத்திய முறைமைக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் தந்திரோபாயங்களைப் பின்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

(i) சிகிச்சையை வழங்குவதன் மூலம் பொது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக 21 நடமாடும் சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 12 சிகிச்சை நிலையங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வயதுவந்தோர் மற்றும் பிள்ளைகளிடம் மருத்துவ முறைமை தொடர்பான நம்பிக்கையை வலுப்படுத்துவதற்காக 03 பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களும் மூன்று கலந்துரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் என்பன நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சினதும் சகல அனைத்து நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்காக ஹோமியோபதி மருத்துவ முறைமை தொடர்பான ஆரம்ப அறிமுகமொன்றை வழங்குவதற்காக மாநாடுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு மாநாடும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) ஊடகங்கள் மூலம் ஹோமியோபதி மருத்துவ முறைமை தொடர்பான பிரசித்தப்படுத்தலை வழங்குவதற்காக ரூபவாஹினி மற்றும் 05 வானொலி கலந்துரையாடல்களை ஒழுங்கமைப்பதற்கும், Web Home

Page ஒன்றை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்தச் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) ஹோமியோபதி மருத்துவர்களுக்கிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக ஹோமியோபதி மருத்துவர்களின் சேவை மற்றும் அனுபவம் என்பவற்றை மதிப்பீடு செய்யும் 02 செயலமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஹோமியோபதி சபைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பான நிர்வாக நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்காக சபையின் நிர்வாக கொள்கை தொடர்பான பிரமாணங்களை தயாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு குழு வரைவினை அங்கீகரித்துக் கொண்டு, இறுதி வரைவு அறிக்கையைத் தயாரித்து அமைச்சரின் மூலம் பிரமாணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் அளவில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 யூலை 20 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹோமியோபதி மக்கள் சுகாதார சேவையை மீளமைப்பதை நோக்காகக் கொண்ட போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹோமியோபதி மருத்துவ தொழில்சார் துறையினரை உருவாக்குவதற்கும் பூரணமான மருத்துவர்களை உருவாக்கி அவர்களது அறிவையும் திறமையையும் விருத்திசெய்வதற்காக துணைச் சட்ட ஏற்பாடுகளைத் தயாரித்தல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஹோமியோபதி மருத்துவ கல்லூரியை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந் நோக்கத்தையும் எய்துவதற்கு முடியாதிருந்தது.

(உ) ஹோமியோபதி மருந்துப் பொருள் உற்பத்தி தொடர்பாக சந்தையில் கிடைக்கக்கூடிய தன்மையை உறுதிப்படுத்துவதற்காக துணைச் சட்டங்களை தயாரித்து ஹோமியோபதி மருந்துக் களஞ்சியம் மற்றும் ஒசுசல என்பவற்றை ஸ்தாபிப்பதற்காக நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்குரிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்நடவடிக்கையும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

93

(ஊ) மருந்து இருப்பு இறக்குமதி மற்றும் பகிர்ந்தளித்தல் யூலை மாதமளவில் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடும் போது 74 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை கவனத்திற்கொள்ளக்கூடிய முரண்கள் விலகல் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**5.4 பொது முயற்சிகள் கணக்குக் குழுவின் பணிப்புரைகளை நிறைவேற்றாமை**

2010 செப்தெம்பர் 15 ஆந் திகதிய பொது முயற்சிகள் கணக்குக் குழுவின் கலந்துரையாடல் குறிப்பின் பிரகாரம், நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் சபையின் பிரமாணங்கள் நாளதுவரையாக்கப்படுதல் வேண்டுமென பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போது மருத்துவ சபை நியமிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அப்பிரமாணங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வருடாந்தப் பதிவுக்கட்டணம்
(ஆ) வங்கிக் கணக்கிணக்கம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)